# இயல் 1

## அன்னை மொழியே

1. **பெருஞ்சித்திரனார் குறிப்பு எழுதுக.**
    - **பெயர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
    - **இயற்பெயர்** : துரைமாணிக்கம்
    - **பெற்றோர்** : துரைசாமி – குஞ்சம்மாள்
    - **ஊர்** : சேலம் மாவட்டம் சமுத்திரம்
    - **காலம்** : 10.3.1933 – 11.6.1995
    - **பணி** : இதழாசிரியர் (தென்மொழி, தமிழ்சிட்டு)
    - **நூல்கள்** : உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், **கனிச்சாறு**, எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி, பள்ளிப்பறவைகள், திருக்குறள் மெய்பொருளுரை.
2. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பவலரேறு சுட்டுவன யாவை?**
    - அன்னை மொழியே;  அழகான செந்தமிழே;
    - பழமைக்கும் பழமையானவளே;
    - கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகத்தின் பேரரசியே;
    - பாண்டிய மன்னனின் மகளே;
    - திருக்குறளின் பெரும் பெருமைக்குறியவளே;
    - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியச் சிறப்பு மிக்கவளே;
    - உன் பெருமைகளை எண்ணி வாழ்த்துகிறோமே!
3. **தமிழின் பெருமைகளை எவ்வாறு பாடி மகிழ்வோம்?**
    - செந்தமிழே;
    - சொல்லுவதற்கு அரிய நின் பெருமைகளை என் நாக்கு எவ்வாறு விரித்து உரைக்கும்;
    - பழம்பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும் கொண்ட தமிழே;
    - வியக்கத்தக்க உன் நீண்ட நிலைத்தன்மையும், வேற்று மொழியாரின் புகழுரைகளும் உன் மேல் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன;
    - செந்தாமரையின் தேனைக் குடித்த வண்டானது சிறகசைத்துப் பாடுவது போல, செந்தமிழே உன்னைச் சுவைத்து உன் சிறப்பினை எங்கும் பாடி மகிழ்கின்றோம்.

# இரட்டுற மொழிதல்

1. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன? தமிழழகனார் குறிப்பு எழுதுக.**
    - ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல்.
    - இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.
    - **இயற்பெயர்**: சண்முக சுந்தரம்
    - **பெற்றோர்**: வேலு – வள்ளியம்மை
    - **காலம்:** 21.4.1929 – 2.10.2015
    - **ஊர்**: தூத்துக்குடி
    - **நூல்கள்**: 12 சிற்றிலக்கியங்கள்
    - **விருதுகள்**: சந்தக்கவிமணி, கவிமாமணி, பாரதிதாசன் விருது.
2. **தமிழழகனார் தமிழையும், கடலையும் எவ்வாறு ஒப்பிடுகிறார்?**

தமிழ்: தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

கடல்: கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.